**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C.No.65/2018**

**Deposition of Witness P. W .1**

| | |
|---|---|
| **Name : ரவி** | **Father/Husband's Name: பொம்மையசாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 15.02.2024**
**Accused present.**

**<u>முதல் விசாரணை</u>**

**1.** நான் ராசிங்காபுரத்தில் குடியிருந்து , டிரைவராக தொழில் செய்து வருகிறேன். கடந்த 07.09.2017ம் தேதி லம்போதரா மில் முன்னால் ஒட்டலுக்கு அருகே என்னுடைய லாரி TN 38 AP 9596 என்ற பதிவெண் கொண்ட என்னுடைய லாரியை நிறுத்திவிட்டு திருமண வேலையாக சென்றுவிட்டு 11.09.2017ம் தேதி மீண்டும் வந்து பார்த்த போது எனது லாரியை காணவில்லை. அங்கு ஓட்டல் முதலாளியிடம் எனது லாரியை பற்றி விசாரணை செய்து விட்டு அன்றைய தினமே சாமிநாதபுரம் காவல்நிலையம் சென்று சம்பவம் தொடர்பாக புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான் அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் மனு அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு இன்சூரன்ஸ் கம்பெனிக்கு சென்று தகவல் தெரிவித்ததன் பேரில் அவர்கள் 550000என்று லாரியின் மதிப்பை சான்றிதழாக கொடுத்தார்கள். அதை சாமிநாதபுரம் காவல்நிலையத்தில் வந்து கொடுத்தேன்.

2. வண்டியை கண்டுபிடித்து கொடுப்பதாக போலிசார் சொன்னார்கள். பின்பு 17.09.2017ம் தேதி என்னை காவல்நிலையத்திலிருந்து அழைத்து லாரியை கண்டுபிடித்து விட்டதாக தகவல் சொன்னதன் பேரில் நான் காவல் நிலையம் சென்றேன். 22.09.2017ம் தேதி காவல் நிலையத்தில்

எனது லாரியை பார்த்தேன். நான் எனது லாரியை அடையாளம் காட்டினேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள லாரி என்னுடையது தான். பின்பு லாரியை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டேன். **லாரி அ.சா.பொ.1, புகைப்படங்கள் (4 எண்ணிக்கைகள்) அ.சா.ஆ.2 மற்றும் சி.டி. அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு சுமார் 4, 5 நாட்கள் கழித்து எனது லாரியில் இருந்த தார்பாயையும் கிடைத்து விட்டதாக தகவல் சொன்னார்கள். காவல்நிலையத்தில் தார் பாயை அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள தார்பாய் என்னுடையது தான். **தார்பாய் அ.சா.பொ.2, புகைப்படங்கள் (2 எண்ணிக்கைகள்) அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவல்நிலையத்தில் வைத்து பிரேம்குமார் என்பவரை காட்டி வண்டியை திருடிய நபர் என்று போலீசார் அடையாளம் காட்டியதன் பேரில் நான் தெரிந்து கொண்டேன். அவரை பார்த்தால் அடையாளம் தெரியும். மேலும், இருவர் திருடியதாக சொன்னார்கள். அவர்களை நான் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

3. இவ்வழக்கின் புகாரை நான் தான் எழுதினேன். வண்டி காணாமல் போய் 5 நாட்கள் கழித்து புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். 07.09.2017ம் தேதி எனது லாரியை நிறுத்தி விட்டு சென்றுவிட்டு திரும்ப 11.09.2017ம் தேதி வந்து பார்த்த போது எனது லாரியை காணவில்லை. இதற்கிடையில் எனது லாரி எப்போது காணாமல் போன விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் லாரியை நிறுத்தி சென்ற போது ஹோட்டல் உரிமையாளரிடம் தகவல் சொல்லி சென்றதாக புகாரில் சொல்லப்பட்டுள்ள நிலையில், எனது வாகனம் எப்போது காணாமல் போனது என்பது குறித்து அவர் எனக்கு தகவல் சொல்லவில்லை என்றும், நானாக நேரில் வந்து பார்க்கும் போது தான் எனக்கு லாரி காணாமல் போன விபரம் தெரியும் என்று சொன்னால் சரிதான்.

4. நான் 11.09.2017ம் தேதி வந்து பார்த்த போது லாரி இல்லை என்று தெரிந்து கொண்ட நிலையில்,

14.09.2017ம் தேதி தான் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் லாரி காணாமல் போன விபரம் கண்டறிந்தவுடன் புகார் கொடுக்காததற்கான காரணம் குறித்து நான் கொடுத்துள்ள புகார் மனுவில் ஏதும் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கு சம்பந்தமாக எனது லாரி திருட்டு போன இடத்தில் 14.09.2017ம் தேதியன்று போலீசார் என்னை விசாரித்தார்கள். நாளது தேதியில் என்னுடன் சேர்த்து அந்த இடத்தில் வைத்து வேறு யாரையும் விசாரிக்கவில்லை. காணாமல் போன எனது லாரி கிடைத்து விட்டதாக சாமிநாதபுரம் போலீசார் தகவல் தெரிவித்ததன் பேரில் நான் அங்கு சென்று லாரியை பார்த்தேன். நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள நபரை தவிர மற்ற இருவரை போலீசார் காவல்நிலையத்தில் லாரி திருட்டு தொடர்பாக எனக்கு அடையாளம் காட்டினார்களா என்றால் இல்லை.

5. எனது லாரி எங்கு யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்பது குறித்து தெரிந்து கொண்டேனா என்றால் தாராபுரம் துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து எடுத்து வந்ததாக சாமிநாதபுரம் போலீசார் எனக்கு சொன்னார்கள். அ.சா.பொ.2 தார் பாய் ஆனது பிரேம்குமார் என்பவரது வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்டதாக எனக்கு போலீசார் சொன்னார்கள். ஹோட்டல் உரிமையாளரை என்னை விசாரித்த போது அவரது ஹோட்டலில் வைத்து விசாரித்தார்கள். என்னுடைய லாரியானது எங்கு யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்பது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றும், சாமிநாதபுரம் காவல்நிலையத்தில் போலீசார் லாரியை காட்டி சொன்னதன் பேரில் தான் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான்.

K R KALAIVANAN

Digitally signed by K R KALAIVANAN
Date: 2024.02.29 11:02:36 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி**